தமிழ் நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1970 மார்ச் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 269, 270 ஆகிய எண்கள் உள்ள வினாக்கள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது 271-ஆம் எண்ணுள்ள வினா எடுத்துக்கொள்ளப்படும்.

Connemara Public Library.

*271. Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the new building constructed for the Connemara Public Library in the Museum compound has been occupied; and

(b) if not, why?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இன்னும் சில சிறு வேலையினங்கள் செய்து முடிக்கப்பட வேண்டும். நூல் அலமாரிகள், மேசை, நாற்காலி ஆகியவற்றை வழங்க வகை செய்ய வேண்டும்.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அடையாற்றி லுள்ள நூல்நிலையம் ஒரு மாத காலமாக மூடப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதன் காரணம் என்ன? அது மீண்டும் திறக்கப் படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூல வினா, கன்னிமாரா நூலகத்தைப் பற்றியது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கன்னிமாரா நூல்நிலையத்தைப் பற்றியது. அடை யாற்றைப்பற்றி விவரம் வேண்டுமானால், தனிக் கேள்வி போடவும்.

திரு. டி. மார்டின்: ஸ்பீக்கர் சார், இந்தக் கன்னிமாரா லைப் ரரிக் கட்டடத்தின் மேல்பாகத்தின் சில இடங்களில் கொஞ்சம் தண்ணீர் கசிந்து அங்குள்ள புத்தகங்களுக்கு எல்லாம் நஷ்டம் ஏற்பட்டது என்று கூறப்படுகிறதே, அது உண்மையா? ஆம் எனில், அந்தச் சேதாரத்தைத் தவிர்க்கும் பொருட்டு. கட்டடம் ரிப்பேர் செய்யப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பழுது பார்க்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 12 லட்சம் 70 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, அதற்கான ஃபர்னிச்சர், அலமாரி, மேசை, நாற்காலி ஆகியவை வாங்க தொகை சாங்ஷன் செய்ய வேண்டியிருக்கிறது. அது முடிந்தவுடனே புத்தகங்கள் நல்ல முறையில் வைக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல்: கன்னிமாரா நூல் நிலையத்திலிருந்து உறுப்பினர்களாக இருக்கின்றவர்களுக்கு, அவர்களுடைய வீட்டிலே கொண்டுவந்து நூல்களைக் கொடுக்கிற ஒரு முறை இருந்து வருகிறது. அந்த முறையை விரிவுபடுத்துகின்ற உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

Thiru K. S. KOTHANDARAMIAH: In the present building of the Connemara Library, the ventilation and other arrangements are very poor and cause inconvenience to the readers who have to take down notes. So, may I request the Hon. Minister to make some temporary arrangements to remove this inconvenience?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்தச் சங்கடங்களை நீக்குவதற்காகத்தான் 12 லட்சம் 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு மத்திய அரசு 6 லட்ச ரூபாய் மானியம் தருகிறது. பாக்கித் தொகையை மாநில அரசு செலவிட்டு, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. கம்பிகள் போடவேண்டும். அலமாரி, மேசை, நாற்காலி ஆகியவையும் போடவேண்டியிருக்கிறது. விரைவிலே அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன.

திரு. ம. சொ. கோவிந்தராசன்: சென்னை மாநகரத்திலுள்ள நூல் நிலையத்திற்கு 'கன்னிமாரா நூல் நிலையம்' என்று பெயர் வைத்திருப்பது போல், மதுரையில் கட்டப்படும் பெரிய நூல் நிலையத்திற்கு 'அண்ணா நூல் நிலையம்' என்று பெயர் வைக்கப்படுமா?

(விடை இல்லை)

திரு. வி. கே. கோதண்டராமன்: 'கன்னிமாரா நூலகம்' என்னும் பெயர் அந்தக் காலத்தில் வைக்கப்பட்டது. பல பெயர்களை மாற்றிக்கொண்டு வருகிறீர்கள். (குறுக்கீடு) ஆகையால், மாண்புமிகு நண்பர் திரு. விநாயகம் அவர்கள் சொன்னதுபோல் 'ஜோதி பாசு நூலகம்' என்று பெயர் வைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பெயர்கள் எல்லாவற்றையும் மாற்ற வேண்டும் என்ற அந்த முடிவுக்கு நாம் வந்துவிடவில்லை. பழைய பெயர்கள் முக்கியமான

1970 மார்ச் 9]

அவசியத்தையொட்டியும் தேவையை யொட்டியும், அவ்வப்போது ஏற்படுகிற உணர்ச்சியையொட்டியும் மாற்றப்படுகின்றன. இது பற்றி முடிவு எதையும் எடுக்கவில்லை.

திரு. நா. வீராசாமி : கன்னிமாரா லைப்ரரியில்தான் பல்கலைக் கழகம் நடத்துகிற தேர்வுகள், அரசாங்கம் நடத்துகிற தேர்வுகள் ஆகியவற்றிற்கான பழைய வினுத்தாள்களெல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல், அவற்றைப் பார்க்கின்றவர்கள், மத்தியில் இருக்கும் சில வினுத் தாள்களை எடுத்துக்கொண்டு போய்விடுகிருர்கள். இதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றிய குற்றச்சாட்டு அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. கொண்டுவரப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, I understand some invaluable old books in the Connemara Public Library . . . .

MR. SPEAKER : Valuable or invaluable?

THIRU K. VINAYAKAM : Invaluable. I mean that they are so very valuable that they cannot be sold for money or any value. Their value is immense. That is the idea. Such kind of old books have been destroyed by white ants in this Library. Was any special step taken to restore such kind of books by some other methods? When a question was put on this subject in the Assembly sometime back, we were told that steps were being taken in that direction. May I know to what extent those steps have fructified in a fruiful manner?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆனுல், புத்தகங்கள் செம்மையாகப் பாது காக்கப்பட எல்லா நடவடிக்கைகளும் கன்னிமாரா நூல் நிலையத்தைப் பொறுத்த வரையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அனைத்திந்தியாவில் இருக்கும் மூன்று முக்கியமான நூல் நிலையங்களில் கன்னிமாரா நூல்நிலையம் ஒன்ருகக் கருதப்பட்டு, எந்தப் புத்தகம் எங்கே பதிப்பிக்கப்பட்டாலும் அதனுடைய படியொன்று இந்த நூல் நிலையத்திற்கு வரவேண்டும் என்று வைக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள புத்தகங்களைக் காப்பதற்கு என்ன என்ன நடவடிக்கையெல்லாம் எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு வருகிருர்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அத்தகைய பழுது ஏற்பட்டதா என்ற விவரம் இல்லை. அப்படியிருந்தால் அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் அதனுடைய விவரங்கள் சேகரித்துத் தரலாம்.